# TNPSC (தொகுதி–IV) ஒரிஜினல் வினாத்தாள்–2008
## (சிறப்புப் போட்டித்தேர்வு)

## பொது அறிவு

1. AB, CD என்பன வட்ட மையத்திலிருந்து சம தூரத்திலுள்ள நாண்கள். AB = 6 செ.மீ. எனில் CD–ன் மதிப்பு என்ன?
A) 3 செ.மீ B) 6 செ.மீ
C) 12 செ.மீ D) 10 செ.மீ

2. ஒரு நேர் வட்டக் கூம்பின் ஆரம் 4 செ.மீ. சாயுயரம் 6 செ.மீ. எனில், அதன் வளைபரப்பு என்ன?
A) $12\pi$ செ.மீ$^2$ B) 12 செ.மீ$^2$
C) $24\pi$ செ.மீ$^2$ D) 24 செ.மீ$^2$

3. ஒரு வட்ட நாற்கரம் ABCD–யில் $\angle A = 100°$ எனில் $\angle C$ ன் மதிப்பு என்ன?
A) 100° B) 80°
C) 50° D) 40°

4. கீழே கொடுக்கப்பட்ட புள்ளிகளில் எது $3x + 4y \leq 7$ ல் அமைந்துள்ளது?
A) (1, 1) B) (1, 2)
C) (2, 1) D) (0, 2)

5. $\sin\theta = \cos\theta$ எனில் $\tan\theta =$
A) 0 B) 1
C) $\sqrt{2}$ D) $\sqrt{3}$

6. இரண்டு நேர்கோடுகள் இணையானவை எனில்,
A) $m_1 = m_2$ B) $m_1 = -m_2$
C) $m_1 . m_2 = -1$ D) $m_1 = \frac{1}{m_2}$

7. பள்ளி கிரிக்கெட் குழு வீரர் ஒருவர் 10 தொடர் போட்டிகளில் பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்கள் 5. அவருடைய ஓட்டங்களின் வீச்சு 87 ஆக இருந்தால் அவர் பெற்ற மிக அதிக ஓட்டங்கள் எவ்வளவு?
A) 5 B) 82
C) 87 D) 92

8. சமன்பாடு $2x^2 - 11x - 6 = 0$ ன் ஒரு மூலம் 6 எனில் மற்றொரு மூலம்
A) $\frac{1}{2}$ B) $-\frac{1}{2}$
C) $-6$ D) $\frac{1}{6}$

9. 'பங்களாதேஷ்' நாட்டின் சுதந்திர போராட்ட வீரர்
A) மகாத்மா காந்தி B) ஷேக் முஜிபுர் ரஹ்மான்
C) பூட்டோ D) மாசே–துங்

10. தமிழ்நாட்டின் சமூக நீதிக்கு வித்திட்டவர்
A) ஈ.வெ.ரா. பெரியார்
B) இராஜாஜி
C) காமராஜர்
D) அண்ணாத்துரை

11. இந்தியாவின் மிக அதிவேக தொடர்வண்டி
A) தாஜ் எக்ஸ்பிரஸ்
B) சதாப்தி எக்ஸ்பிரஸ்
C) ராஜ்தானி எக்ஸ்பிரஸ்
D) ஜி.டி. எக்ஸ்பிரஸ்

12. கார்கில் யுத்தம் நடைபெற்ற ஆண்டு
A) 2000 B) 1999
C) 1998 D) 1997

13. முருகப்பா தங்க கோப்பை எந்த விளையாட்டோடு தொடர்புடையது?
A) ஹாக்கி B) கால்பந்து
C) கிரிக்கெட் D) படகுப் போட்டி

14. உலகின் சர்க்கரைக் கிண்ணம்
A) கியூபா B) ஜாவா
C) இந்தியா D) சீனா

15. அரபிக்கடலின் ராணி
A) விசாகப்பட்டிணம் B) தூத்துக்குடி
C) கொச்சி D) காண்ட்லா

16. வந்தே மாதரம் என்னும் பாடல் எந்த மொழியில் முதன்முதலில் இயற்றப்பட்டது?
A) அசாமி B) வங்காள மொழி
C) இந்தி D) சமஸ்கிருதம்

17. நவீன காலங்களில் அரசியல் உரிமைகளுக்கு உத்திரவாதம் பெற்றவர்கள்
A) குடிமக்கள் அனைவரும்
B) வயது வந்த குடிமக்கள்
C) சொத்துரிமை பெற்றவர்கள்
D) ஆண்கள் மட்டும்



www.recruitmentguru.com

**18. இந்தியாவில் மிக அடர்த்தியான மக்கள்தொகை உள்ள மாநிலம்**
A) உத்திர பிரதேசம் B) மேற்கு வங்காளம்
C) தமிழ்நாடு D) கேரளா

**19. 40, 43, 46 .......... ன் 15–வது உறுப்பு**
A) 84 B) 83
C) 82 D) 80

**20. ஒரு கோபுரத்தின் 100 மீ. தொலைவிலிருந்து அதன் உச்சிக்கான ஏற்ற கோணம் 45° எனில் கோபுரத்தின் உயரம் என்ன?**
A) 100 மீ. B) 50 மீ.
C) 200 மீ. D) 25 மீ.

**21. வளிமண்டலமில்லையெனில் ஆகாயத்தின் நிறம்**
A) நீலம் B) வெள்ளை
C) சிவப்பு D) கருப்பு

**22. ஆகஸ்ட் 2005–ல் அமெரிக்காவில் மிக அதிக அளவில் சூறாவளி ஏற்பட்டு 650 பேர்களுக்கு மேல் கொல்லப்பட்ட இடம்**
A) நியூ ஓர்லீன்ஸ் B) கலிபோர்னியா
C) அலாஸ்கா D) டெக்ஸாஸ்

**23. தமிழ்நாடு வெடிமருந்து உற்பத்தி தொழிற்சாலை எங்குள்ளது?**
A) வேலூர் B) காஞ்சிபுரம்
C) செய்யார் D) வந்தவாசி

**24. சூரியனில் ஆற்றல் எவ்வாறு உருவாகிறது?**
A) அணுக்கரு பிளவு
B) அணுக்கரு இணைவு
C) வாயுக்கள் எரிவதால்
D) ஹைட்ரஜன் உள்ளதால்

**25. மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம் எங்கு உள்ளது?**
A) கொல்கத்தா B) கட்டாக்
C) பெங்களூரு D) மைசூரு

**26. அதிகமாக உபயோகப்படும் பென்சிலின் எதிர்ப்பு பொருளை உருவாக்குவது**
A) ஆல்கா B) பாக்டீரியம்
C) பூஞ்சை D) தாவரம்

**27. மிகப்பெரிய உயிருள்ள செல் எது?**
A) நெருப்புக்கோழி முட்டை
B) பாரமேசியம்
C) யூக்ளினா
D) ஹைட்ரா

**28. சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப் படும் சிகிச்சை**
A) டையலாசிஸ்
B) அக்குபஞ்சர்
C) இ.சி.ஜி.
D) ஆன்ஜியோபிளாஸ்டி

**29. 'துரோணாச்சார்யா' விருது வழங்கப்படுவது**
A) டென்னிஸ் விளையாட்டு வீரருக்கு
B) கிரிக்கெட் விளையாட்டு வீரருக்கு
C) விளையாட்டு பயிற்சியாளருக்கு
D) ஹாக்கி விளையாட்டு வீரருக்கு

**30. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | கதக்களி | 1) | தமிழ்நாடு |
| b) | ஒடிசி | 2) | ஆந்திர பிரதேசம் |
| c) | குச்சிப்புடி | 3) | கேரளா |
| d) | பரதநாட்டியம் | 4) | ஒரிஸா |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

**31. கீழ்கண்ட சொற்றொடர்களை ஆராய்க.**
**துணிபு (A)** : வங்கப்பிரிவினை தேசிய உணர்வை ஊக்குவித்தது
**காரணம் (R)** : வங்கப்பிரிவினை ஒன்றுபட்ட மக்களைப் பிரிக்கும் முயற்சி.
**இவற்றுள்:**
A) (A) மற்றும் (R) உண்மை, (R) இல் சொல்லப்பட்ட விளக்கம் (A) க்கு சரியான விளக்கமாகும்.
B) (A) மற்றும் (R) உண்மை ஆனால் (R) இல் சொல்லப்பட்ட விளக்கம் (A) க்கு சரியான விளக்கமல்ல.
C) (A) ல் சொல்லப்பட்டது உண்மை, ஆனால் (R) உண்மை இல்லை.
D) (A) உண்மை இல்லை ஆனால் (R) உண்மை

**32. கீழ்க்கண்டவற்றில் எது சரியாகப் பொருத்தப் பட்டுள்ளது?**
A) அமைச்சரவை தூதுக்குழு – 1946
B) வங்கப் பிரிவினை – 1906
C) கிரிப்ஸ் தூதுக்குழு – 1945
D) தனிநபர் அறப்போர் – 1939



www.recruitmentguru.com

**33. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள சம்பவங்களை கால முறைப்படி வரிசைப்படுத்துக.**

I) காந்தி–இர்வின் உடன்படிக்கை

II) தண்டியாத்திரை

III) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

IV) லாகூர் காங்கிரஸ்

**மேற்கண்டவற்றின் சரியான வரிசை**

| | | | | |
|---|---|---|---|---|
| A) | IV | II | I | III |
| B) | II | III | I | IV |
| C) | III | II | IV | I |
| D) | IV | III | II | I |

**34. இந்தியா சுதந்திரமடைந்த போது காங்கிரஸின் தலைவர் யார்?**

A) மகாத்மா காந்தி B) ஜே.பி. கிருபாளனி

C) ஜவஹர்லால் நேரு D) சர்தார் பட்டேல்

**35. கி.பி. 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தியாவின் அரசுப் பிரதிநிதியாக இருந்தவர் யார்?**

A) லின்லித்கோ பிரபு

B) வேவல் பிரபு

C) வில்லிங்டன் பிரபு

D) இவர்களில் எவரும் இல்லை

**36. கேசரி என்பது**

A) சமூக சீர்திருத்தத்திற்காக திலகரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு

B) எஸ்.என்.பானர்ஜிக்கு சொந்தமான ஒரு ஆங்கில பத்திரிக்கை

C) ஒரு மராத்திய பத்திரிக்கை

D) இவை எதுவுமில்லை

**37. கி.பி. 1939–இல் பார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கியவர் யார்?**

A) டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

B) சுபாஷ் சந்திரபோஸ்

C) சி.ஆர். தாஸ்

D) இவர்களில் எவருமில்லை

**38. இராஜாஜி சட்டத்தை மீறி உப்பு எடுத்த இடம்**

A) திருப்பூர் B) வேதாரண்யம்

C) மணியாச்சி D) சென்னை

**39. கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்பட்டவர் யார்?**

A) சுப்பிரமணிய சிவா

B) வ.உ. சிதம்பரம் பிள்ளை

C) மகாகவி பாரதி

D) திருப்பூர் குமரன்

**40. கி.பி. 1946–ஆம் ஆண்டு இடைக்கால அரசில் உள்துறை அமைச்சரான தமிழர்**

A) காமராசர் B) பி.டி. இராஜன்

C) இராஜாஜி D) இவர்களில் எவருமில்லை

**41. அரசியலமைப்பின் எந்தப் பகுதி குடியுரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றது?**

A) I B) II

C) III D) IV

**42. அடிப்படை உரிமைகளின் மீது சரியான வரையறைகளை பின்வருவனவற்றுள் எந்த அதிகாரி விதிக்கலாம்?**

A) பாராளுமன்றம்

B) உச்ச நீதிமன்றம்

C) குடியரசுத் தலைவர்

D) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை

**43. குடியரசுத் தலைவரை குற்றம் சுமத்துவதன் மூலம் பதவி நீக்கம் செய்யலாம். அதற்கான தீர்மானத்தை**

A) மக்களவையில் கொண்டு வரலாம்

B) இந்திய உச்ச நீதிமன்றத்தில் கொண்டு வரலாம்

C) பாராளுமன்றத்தின் இருஅவைகளிலும் கொண்டு வரலாம்

D) அமைச்சரவையில் கொண்டு வரலாம்

**44. மாநிலங்கள் அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை**

A) 250 உறுப்பினர்கள்

B) 270 உறுப்பினர்கள்

C) 200 உறுப்பினர்கள்

D) 230 உறுப்பினர்கள்

**45. சட்டசபையின் பாதுகாவலர்**

A) பிரதம அமைச்சர்

B) குடியரசுத் தலைவர்

C) துணை குடியரசுத்தலைவர்

D) சபாநாயகர்

**46. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியும், மற்ற நீதிபதிகளும் பதவி வகிக்கும் காலம்**

A) 60 வயது வரையிலும்

B) வாழ்நாள் முழுமைக்கும்

C) 62 வயது வரையில்

D) 58 வயது வரையில்

**47. மத்திய அரசு தேர்வாணையத்தின் அங்கத்தினர்கள்**

A) மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்

B) பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்

C) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்

D) அமைச்சரவைக் குழுவால் நியமிக்கப்படுகிறார்கள்



www.recruitmentguru.com

**48. வருமான வரியை செலுத்துதல் என்பது எதனைக் குறிக்கிறது?**

A) பாரம்பரிய ஆளுமையை
B) நியாயமான சட்ட ஆளுமையை
C) சிறப்பியல்புகளை உடைய தலைமை ஆளுமையை
D) இவை அனைத்தும்

**49. தமிழ்நாட்டில் பஞ்சாயத்துத் தலைவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

A) மேயர் B) சேர்மன்
C) முதல்வர் D) பிரதமர்

**50. இந்தியா உறுப்பினராயிருப்பது**

A) ஐ.நா. அமைப்பு
B) கூட்டுசேராமை இயக்கம்
C) சார்க் (SAARC)
D) இவை அனைத்திலும்

**51. புலிப் பொருளாதார நாடுகள்**

A) அமெரிக்கா, இங்கிலாந்து
B) ரஷ்யா, ஜெர்மனி
C) தாய்லாந்து, சிங்கப்பூர்
D) இந்தியா, சீனா

**52. பருத்தி விளைவதற்கு ஏற்ற மண்**

A) செம்மண் B) மலை மண்
C) கரிசல் மண் D) வண்டல் மண்

**53. தேயிலை அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலம்**

A) தமிழ்நாடு B) அஸ்ஸாம்
C) கர்நாடகா D) கேரளா

**54. இந்தியாவின் முன்னேற்றத்திற்காக 1950–ம் ஆண்டில் இந்திய அரசு ஆரம்பித்தது.**

A) ஐந்தாண்டு திட்டங்கள்
B) பசுமை புரட்சி
C) செயற்கைக்கோள்
D) தேசிய அபிவிருத்தி குழு

**55. தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு 'டைடல் பார்க்' என்பதை ஏற்படுத்துகின்ற நிறுவனங்கள்**

A) எல்காட் மற்றும் சிப்காட்
B) எல்காட் மற்றும் டிட்கோ
C) டிட்கோ மற்றும் சிப்காட்
D) டிட்கோ மற்றும் சிட்பி

**56. 14 வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்ட ஆண்டு**

A) 1969 B) 1949
C) 1956 D) 1980

**57. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | சித்தரஞ்சன் | 1) | ரயில் எஞ்சின் ஆலை |
| b) | நேபா நகர் | 2) | ரயில் பெட்டி ஆலை |
| c) | மும்பை | 3) | அச்சு காகித ஆலை |
| d) | ஜாம்ஷெட்பூர் | 4) | பருத்தி நெசவு ஆலை |
| | | 5) | இரும்பு எஃகு ஆலை |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 5 |
| B) | 1 | 4 | 3 | 5 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 5 | 2 | 3 | 1 |

**58. இந்தியாவின் மான்செஸ்டர் மற்றும் தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்பது**

A) டெல்லி மற்றும் சென்னை
B) கொல்கத்தா மற்றும் சென்னை
C) பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர்
D) மும்பை மற்றும் கோயம்புத்தூர்

**59. பின்வரும் எந்த உற்பத்தியில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது?**

A) நெல் B) கோதுமை
C) சணல் D) கடலை

**60. தமிழ்நாட்டின் நுழைவாயில்**

A) கோயம்புத்தூர் B) சென்னை
C) தூத்துக்குடி D) மதுரை

**61. தமிழ்நாட்டில் கல்வியறிவில் முன்னனியில் இருக்கும் மாவட்டம்**

A) சேலம் B) கன்னியாகுமரி
C) மதுரை D) திருச்சி

**62. தமிழ்நாட்டில் .......... வருடத்திற்குள் எல்லோருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பது அரசின் முதன்மை நோக்கமாகும்.**

A) 2010 B) 2020
C) 2005 D) 2008

**63. தமிழ்நாட்டின் 2001 – வருடத்திய மக்கள் தொகை**

A) 62.1 மில்லியன்கள்
B) 61.2 மில்லியன்கள்
C) 60.1 மில்லியன்கள்
D) 64.2 மில்லியன்கள்



www.recruitmentguru.com

64. பகல் மற்றும் இரவு எதனால் ஏற்படுகின்றது?
A) புவி சூரியனை வலம் வருவதால்
B) புவி தன்னைத்தானே சுழன்று வருவதால்
C) புவியின் ஈர்ப்பு விசை
D) இவை எதுவுமில்லை

65. பாரதீப் துறைமுகம் எதில் அமைந்துள்ளது?
A) ஆந்திர பிரதேசம் B) கர்நாடகம்
C) ஒரிஸ்ஸா D) தமிழ்நாடு

66. காஸிரங்கா தேசிய பூங்கா எங்கே அமைந்துள்ளது?
A) பீகார் B) மத்திய பிரதேசம்
C) உத்திர பிரதேசம் D) அஸ்ஸாம்

67. சணல் எங்கு அதிகமாக பயிரிடப்படுகின்றது?
A) மேற்கு வங்காளம் B) கர்நாடகம்
C) கேரளா D) தமிழ்நாடு

68. அதிக பெண்கள் கொண்ட மாநிலம்
A) கேரளா B) மகாராஷ்டிரா
C) மேற்கு வங்காளம் D) குஜராத்

69. தென் மேற்கு பருவக்காற்று அதிக மழைப் பொழிவை கொடுப்பது
A) மேற்கு கடற்கரை B) கிழக்கு கடற்கரை
C) தார் பாலைவனம் D) மால்வா பீடபூமி

70. கப்பல் கட்டும் தொழிற்சாலை எந்த இடத்தில் அமைந்துள்ளது?
A) பெங்களூரு B) ஹைதராபாத்
C) கொச்சின் D) வாரணாசி

71. புத்தர் எங்கு முதன் முதலில் போதித்தார்?
A) சாரநாத் B) சாஞ்சி
C) கயா D) வாரணாசி

72. கீழ்க்கண்டவர்களில் குப்தர்கள் கால கணித மேதை அல்லாதவர் யார்?
A) பாணபட்டர் B) வராகமிகிரர்
C) பிரம்மகுப்தர் D) ஆரியபட்டர்

73. 'வாதாபி கொண்டான்' என்ற பட்டத்தை அடைந்தவர்
A) பரமேஸ்வரவர்மன்
B) முதலாம் மகேந்திரவர்மன்
C) முதலாம் நரசிம்மவர்மன்
D) சிம்மவிஷ்ணு

74. 'அஷ்டதிக்கஜங்கள்' இருந்த பேரரசரின் அவை
A) அச்சுதராயர் B) கிருஷ்ண தேவராயர்
C) ராமராயர் D) சதாசிவராயர்

75. முகம்மது கஜினி இந்தியாவின் மீது படையெடுத்து வந்ததற்கு முக்கியக் காரணம் என்ன?
A) இஸ்லாம் சமயத்தைப் பரப்புவதற்கு
B) அரசை விரிவுபடுத்த
C) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடித்துச் செல்ல
D) பொழுது போக்குக்காக

76. ஷாஜஹான் ஆட்சியின் சிறப்பம்சம்
A) பொருளாதாரச் செழிப்பு
B) ஆட்சி நிர்வாகத் திறமை
C) அயல்நாட்டுக் கொள்கை
D) கலையும், கட்டிடங்களும்

77. இந்தியாவில் தல சுய ஆட்சியின் தந்தை என அழைக்கப்பட்டவர்
A) கானிங் பிரபு B) ரிப்பன் பிரபு
C) ராபர்ட் கிளைவ் D) டல்ஹௌசி பிரபு

78. தமிழ்நாட்டில் இரயத்வாரி முறையைக் கொண்டு வந்தவர்
A) காரன்வாலிஸ் பிரபு
B) டல்ஹௌசி பிரபு
C) சர் தாமஸ் மன்றோ
D) மேயோ பிரபு

79. புகாரை துறைமுகப்பட்டினமாக வைத்திருந்தவர்கள்
A) சோழர்கள் B) சேரர்கள்
C) பாண்டியர்கள் D) பல்லவர்கள்

80. பண்டையச் சேர மரபில் புகழ்மிக்க பேரரசர் யார்?
A) உதியஞ் சேரலாதன் B) இமயவரம்பன்
C) செங்குட்டுவன் D) இளங்கோவடிகள்

81. இதயத்திலிருந்து இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்த நாளங்கள்
A) தமனி B) சிரை
C) தந்துகிகள் D) பெருஞ்சிரை

82. குழந்தைப் பருவத்தில் தோன்றும் முதல் தொகுப்பு பற்கள்
A) கோரைப் பற்கள் B) பால் பற்கள்
C) அறிவுப் பற்கள் D) நிலைத்த பற்கள்

83. மீன்கள் நீந்திச் செல்லும் திசை மாற்றத்திற்கு காரணமான துடுப்புகள்
A) முதுகு துடுப்புகள் B) மார்புத் துடுப்புகள்
C) இடுப்புத் துடுப்புகள் D) வால் துடுப்புகள்

84. மீன்களின் வளர்ப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) பிஸி கல்ச்சர் B) செரி கல்ச்சர்
C) வெர்மி கல்ச்சர் D) நீர் உயிரிகள் வளர்ப்பு

85. எலும்புத் தசையின் செயல் அலகு எது?
A) மையோசின் B) ஆக்டின்
C) சார்க்கோமியர் D) தசை நார்



www.recruitmentguru.com

**86. தாவர செல்லில் D.N.A. காணப்படும் பகுதி**

A) பசுங்கணிகம் B) மைட்டோகாண்ட்ரியா
C) உட்கரு D) இவை அனைத்தும்

**87. ஓர் தாவர செல் விலங்கு செல்லில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?**

A) குரோமோசோம் B) செல்சுவர்
C) செல் சவ்வு D) உட்கரு

**88. கீழுள்ள ஒளி அலைகளில் எது ஒளிச் சேர்க்கையில் அதிக திறன் கொண்டது?**

A) நீலம் B) பச்சை
C) ஆரஞ்சு D) மஞ்சள்

**89. ஒரு மரத்தின் வயதினை கணக்கிடுவது எவ்வாறு?**

A) அதன் உயரத்தினை அளத்தல்
B) அதன் விட்டத்தை அளத்தல்
C) அதன் செல் சாறினை ஆய்வு செய்தல்
D) அதன் வளர்ச்சி வளையங்களை எண்ணுதல்

**90. இலையின் வெளிப்புறத்தில் உள்ள புறத்தோலில் காணப்படும் சிறுதுளைகள் மூலம் வாயு பரிமாற்றம் செய்கிறது. அத்துளைகள் எவ்வாறு அழைக்கப் படுகின்றன?**

A) ஹைடதோடுகள் B) ஸ்டிக்மேடா
C) இலைத்துளைகள் D) ஸ்ட்ரோமா

**91. ஜூல் வெப்ப விதி என்பது**

A) $H = IR^2t$ B) $H = I^2Rt^2$
C) $H = I^2Rt$ D) $H = IRt^2$

**92. பார்வையின் நீடிப்பு**

A) $\frac{1}{32}s$ B) $\frac{1}{24}s$
C) $\frac{1}{16}s$ D) $\frac{1}{8}s$

**93. உருகுதலின் உள்ளுறை வெப்பத்தின் அலகு**

A) $J\,kg^{-1}\,K^{-1}$ B) $J\,kg^{-1}$
C) $J\,kg\,K^{-1}$ D) $J\,K^{-1}$

**94. அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தும் கழிகளாக பயன்படுத்தப்படுவது**

A) காட்மியம் B) போரான்
C) ஹேப்னியம் D) இவை அனைத்தும்

**95. 20 மீ.வி$^{-1}$ திசைவேகத்தில் செல்லும் 500 கிலோ கிராம் நிறை கொண்ட வண்டி 50 மீ. ஆரம் கொண்ட வளைவான பாதையில் திரும்புவதற்கு தேவையான மையநோக்கு விசை**

A) 4000 N B) 5000 N
C) 200 N D) 1250 N

**96. சோடியம் கார்பனேட்டின் பயனை தேர்ந்தெடு**

A) கடின நீரை மென்னீராக மாற்ற பயன்படுகிறது
B) தீயணைப்பானாக பயன்படுகிறது
C) பீங்கான் தொழிற்சாலையில் பயன்படுகிறது
D) தோல் பதனிடுதலில் பயன்படுகிறது

**97. கீழ்வரும் வினையில் தாமிரம் எந்நிலையில் கிடைக்கிறது?**

$$CuSO_4 + Zn \rightarrow ZnSO_4 + Cu\downarrow$$

A) வாயு B) திரவம்
C) திட D) வீழ்படிவு

**98. கீழ்வருவனவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?**

A) அம்மோனியா – புறவேற்றுமை தன்மையுடையது
B) கந்தக அமிலம் – நீர் நீக்கும் காரணி
C) கந்தக டைஆக்ஸைடு – ஹேபர் முறை
D) கந்தகம் – இலேசான தனிமம்

**99. என்சைம்கள் உதவியால் கரிம சேர்ம மூலக்கூறுகள் சிறிய மூலக்கூறுகளாக மாறும் நிகழ்ச்சி**

A) நொதித்தல் B) எஸ்டர் ஆக்குதல்
C) ஆக்ஸிஜனேற்றம் D) ஹைட்ரஜன் நீக்குதல்

**100. ஹேபர் முறையில் அம்மோனியா தயாரித்தலில் பயன்படுத்தப்படும் வினையூக்கி**

A) காப்பர் B) இரும்பு
C) கோபால்ட் D) அம்மோனியம் குளோரைடு



www.recruitmentguru.com

# பொதுத்தமிழ்

101. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) எவ்வழி அவ்வழி குடிகள் அரசன்
B) குடிகள் அரசன் அவ்வழி எவ்வழி
C) அவ்வழி அரசன் எவ்வழி குடிகள்
D) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

102. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
B) எட்டியது கைக்கு வாய்க்கு எட்டவில்லை
C) கைக்கு எட்டியது எட்டவில்லை வாய்க்கு
D) எட்டியது எட்டவில்லை வாய்க்கு கைக்கு

103. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) மிஞ்சினால் அளவுக்கு அமுதமும் நஞ்சாகும்
B) அளவுக்கு அமுதமும் மிஞ்சினால் நஞ்சாகும்
C) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்
D) மிஞ்சினால் அளவுக்கு அமுதமும் நஞ்சாகும்

104. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) செல்வம் வாழ்வே நோயற்ற குறைவற்ற
B) நோயற்ற செல்வம் குறைவற்ற வாழ்வே
C) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
D) குறைவற்ற வாழ்வே நோயற்ற செல்வம்

105. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) பாய்ச்சலுக்கு அடையாளம் பதுங்குவது புலி
B) பதுங்குவது புலி பாய்ச்சலுக்கு அடையாளம்
C) புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்
D) பதுங்குவது புலி அடையாளம் பாய்ச்சலுக்கு

106. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) பயிரை மேய்ந்தால் வேலியே விளைவது எப்படி?
B) எப்படி மேய்ந்தால் வேலியே பயிரை விளைவது?
C) மேய்ந்தால் வேலியே பயிரை விளைவது எப்படி?
D) வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?

107. பெயர்ச்சொல்லின் வகையறிக – "குதிரை"
A) இடைச்சொல் B) உரிச்சொல்
C) பெயர்ச்சொல் D) சினைப்பெயர்

108. பெயர்ச்சொல்லின் வகையறிக – "மதுரை"
A) காலப்பெயர் B) தொழிற்பெயர்
C) இடப்பெயர் D) சினைப்பெயர்

109. பெயர்ச்சொல்லின் வகையறிக – "வற்றல்"
A) சினைப்சொல் B) குணப்பெயர்
C) தொழிற்பெயர் D) காலப்பெயர்

110. பெயர்ச்சொல்லின் வகையறிக – "கார்த்திகை பிறந்தது"
A) காலப்பெயர் B) இடப்பெயர்
C) மரபுப்பெயர் D) குணப்பெயர்

111. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க "இளங்கோ சென்னைக்குச் சென்றான்"
A) இளங்கோ எதற்குச் சென்றான்?
B) இளங்கோ எங்குச் சென்றான்?
C) இளங்கோ எப்படிச் சென்றான்
D) இளங்கோ யாருடன் சென்றான்?

112. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க "காந்தியடிகளை இந்தியர் அனைவரும் அறிவர்"
A) காந்தியடிகளை அறிந்தவர் யார்?
B) யாரேனும் காந்தியடிகளை அறியாதிருப்பாரோ?
C) காந்தியடிகளை அறிபவர் யாரேனும் உளரா?
D) இந்தியர் காந்தியடிகளை அறிவாரோ?

113. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க "கரிகாலன் கல்லணையைக் கட்டினான்"
A) கரிகாலன் எவ்வாறு கட்டினான்?
B) கரிகாலன் எதனைக் கட்டினான்?
C) கல்லணையைக் கட்டியது கரிகாலனா?
D) கரிகாலன் கல்லணையைக் கட்டினானா?

114. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக "கதிரவன் மாலையில் மறைவான்"
A) கட்டளை வாக்கியம்
B) செய்தி வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம்
D) உடன்பாட்டு வினை வாக்கியம்

115. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக "என்னே இனிமை! இப்பலாக் கனி"
A) வினா வாக்கியம் B) வியப்பு வாக்கியம்
C) கட்டளை வாக்கியம் D) செய்தி வாக்கியம்

116. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக "காலையில் படி"
A) கட்டளை வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) எதிர்மறை வாக்கியம்

117. எவ்வகை வாக்கியம் எனக் காண்க "இளமையில் கற்க வேண்டும்"
A) வினா வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) கட்டளை வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

118. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக "தாயின் கடமை என்ன"
A) வினா வாக்கியம் B) கட்டளை வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) பிறவினை வாக்கியம்

119. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக
"என்னே தமிழின் இனிமை"
A) கட்டளை வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) எதிர்மறை வாக்கியம்

120. எவ்வகை வினை எனக் கண்டறிக
"இலக்கணம் கற்பித்தேன்"
A) தன்வினை B) பிறவினை
C) குறிப்பு வினை D) செயப்பாட்டு வினை

121. "மா" என்ற ஒரெழுத்து ஒரு மொழியின் பொருள்
A) அதிகம் B) குறைவு
C) பெரிய D) சிறிய

122. "தை" என்ற ஒரெழுத்து ஒரு மொழியின் பொருள்
A) வாரம் B) மாதம்
C) நாள் D) வருடம்

123. ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் காண்
"கா"
A) யாலை B) காலை
C) சோலை D) பாலை

124. "கண்டவன்" வேர்ச்சொல்லை அறிக
A) கண்டு B) கண்ட
C) கண் D) காண்

125. "வருவான்" வேர்ச்சொல்லை அறிக
A) வருக B) வா
C) வந்து D) வந்த

126. "படித்தான்" வேர்ச்சொல்லை அறிக
A) படி B) படித்து
C) படித்த D) படித்தான்

127. "நின்றான்" வேர்ச்சொல்லை அறிக
A) நில் B) நின்
C) நின்று D) நின்ற

128. "போனான்" வேர்ச்சொல்லை அறிக
A) போந்து B) போன்
C) போந்த D) போ

129. "காண்" என்பதன் தெரிநிலை வினைமுற்று
A) கண்டு B) கண்ட
C) காண்கின்ற D) கண்டான்

130. "நடு" என்னும் வேர்ச்சொல்லுக்குரிய தொழிற்பெயரைக் கண்டறிக
A) நாடு B) நட்ட
C) நட்டான் D) நடுதல்

131. கீழ்காணும் உவமைத் தொடர் விளக்கும் பொருள் எது?
"இணரூழ்த்தும் நாறா மலர்"
A) மணமக்கள் அணியும் மாலை
B) கற்றது உணர விரித்துரையாதார்
C) ஆண்டவனுக்குச் சூட்டும் மலர்மாலை
D) செம்மையாகப் பேசத் தெரியாதவர்

132. கீழ்வரும் பாவில் உள்ள எதுகைச் சொற்களைத் தேர்ந்தெடு
"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை"
A) தாங்கும் – பொறுத்தல்
B) தம்மை – தாங்கும்
C) நிலம் – தலை
D) அகழ்வார் – இகழ்வார்

133. கீழ்வரும் பாவில் உள்ள எதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக
"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்"
A) தெய்வத்தான் – எனினும்
B) கூலி – முயற்சிதரும்
C) தெய்வத்தான் – மெய்வருத்த
D) முயற்சிதன் – ஆகாது

134. கீழ்வரும் தொடர்களில் வரும் மோனைச் சொற்களைத் தேர்ந்தெடு
"நாணால் உயிரை துறப்பார் உயிர் பொருட்டால் நாண் துறவார் நாணாள் பலர்"
A) நாணால் – நாண் துறவார்
B) நாணால் – உயிரை
C) உயிரை – நாணல்
D) நாணால் – துறப்பார்

135. கீழ்வரும் தொடரில் அமைந்த மோனைச் சொற்களைத் தேர்ந்தெடு
"கற்பனை வளர்தல் வேண்டும் கவிநயம் பிறத்தல் வேண்டும்"
A) வளர்தல் – கற்பனை
B) கற்பனை – வேண்டும்
C) கற்பனை – கவிநயம்
D) கவிநயம் – பிறத்தல்

136. கீழ்வரும் தொடரில் பயின்று வரும் தொடை யாது?
"பந்திக்கு முந்து
படைக்குப் பிந்து"
A) எதுகைத்தொடை B) முரண் தொடை
C) இயைபுத்தொடை D) பொழிப்புத்தொடை

137. "உலகப் பொதுமறை" என்றழைக்கப்படும் நூல்
A) திருவாசகம் B) திருக்குறள்
C) திருவெம்பாவை D) திருவாய்மொழி

138. அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல் "தமிழ்மறை" எனும் சிறப்புடைய நூல்
A) தாயுமானவர் பாடல்கள்
B) திருவெம்பாவை
C) தேவாரம்
D) திருப்பாவை



www.recruitmentguru.com

**139. கீழ்வரும் தொடர்களில் வரும் இயைபுச் சொற்களைத் தேர்ந்தெடு**

**"மனதில் உறுதி வேண்டும்**
**வாழ்வினில் தெளிவு வேண்டும்"**

A) மனதில் – தெளிவு
B) வேண்டும் – வேண்டும்
C) உறுதி – தெளிவு
D) உறுதி – வாழ்வினிலே

**140. கீழ்வரும் சொற்கள் எவ்வகைத் தொடையைச் சேர்ந்தது?**

**"இரவும் பகலும்"**

A) இயைபுத் தொடை
B) முரண் தொடை
C) மோனைத் தொடை
D) எதுகைத் தொடை

**141. பொருத்துக**

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| 1) | தெய்வப்புலவர் | அ) | பாரதிதாசன் |
| 2) | கவிச்சக்கரவர்த்தி | ஆ) | சுரதா |
| 3) | புரட்சிக்கவி | இ) | திருவள்ளுவர் |
| 4) | உவமைக்கவிஞர் | ஈ) | கம்பர் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | இ | ஈ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | ஈ | அ | ஆ | இ |
| D) | இ | ஈ | ஆ | அ |

**142. புதுவைக்குயில் என்று அழைக்கப்படுபவர்**

A) கண்ணதாசன் B) வாணிதாசன்
C) பாரதிதாசன் D) காளிதாசன்

**143. உச்சிமேற்கோள் புலவர் யார்?**

A) நச்சினார்க்கினியர் B) இளம்பூரணர்
C) பாரதியார் D) பாரதிதாசனார்

**144. "செந்நாப்போதார்" என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்**

A) கம்பர் B) புகழேந்தி
C) வள்ளுவர் D) வைரமுத்து

**145. "பாவேந்தர்" என்று குறிக்கப் பெறும் கவிஞர்**

A) பாரதியார் B) பாரதிதாசன்
C) கண்ணதாசன் D) வைரமுத்து

**146. நூலுக்கான சிறப்புப் பெயரைப் பொருத்துக**

| சிறப்புப் பெயர் | | நூல் | |
|---|---|---|---|
| 1) | வேளாண்வேதம் | அ) | மகாபாரதம் |
| 2) | உத்தரவேதம் | ஆ) | திருவாய்மொழி |
| 3) | ஐந்தாவதுவேதம் | இ) | திருக்குறள் |
| 4) | சாமவேதம் | ஈ) | நாலடியார் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | இ | அ | ஈ |
| B) | ஈ | இ | அ | ஆ |
| C) | ஈ | அ | ஆ | இ |
| D) | இ | ஆ | ஈ | அ |

**147. "உட்கார்ந்திருந்தனர்" என்ற சொல் எவ்வாறு பிரியும்?**

A) உட்கார் + இருந்தனர்
B) உட்கார்ந்து + இருந்தனர்
C) உட் + கார்ந்திருந்தனர்
D) உட்கார் + திருந்தனர்

**148. கீழ்க்காண் சொல்லை பிரித்து எழுதியதில் சரியான விடையைத் தேர்க**

**"ஆன்றாரோடொப்பர்"**

A) ஆன்றா + ரோடொ + ப்பர்
B) ஆன்றாரோ + டொப்பர்
C) ஆன்றாரோடு + ஒப்பர்
D) ஆன்றார் + ஒடு + ஒப்பர்

**149. கீழ்க்காண் சொல்லை பிரித்து எழுதியதில் சரியான விடையைத் தேர்க**

**"தெங்கம்பழம்"**

A) தெங் + கம் + பழம்
B) தெங்கம் + பழம்
C) தெங்கு + அம் + பழம்
D) தெங் + கம்பழம்

**150. பிரித்து எழுதுக – "தெண்ணீர்"**

A) தெண் + ணீர் B) தெண் + நீர்
C) தெண்ணீ + நீர் D) தெள் + நீர்

**151. பெயர்ச்சொல்லின் வகையறிதல் – "கருமை"**

A) இடப்பெயர் B) பண்புப்பெயர்
C) காலப்பெயர் D) தொழிற்பெயர்

**152. பெயர்ச்சொல்லின் வகையறிக – "கிளை முறிந்தது"**

A) பொருட்பெயர் B) சினைப்பெயர்
C) குணப்பெயர் D) தொழிற்பெயர்

**153. "மீமிசை ஞாயிறு" என்பதன் இலக்கணக் குறிப்பு**

A) பண்புத்தொகை
B) இரட்டைக்கிளவி
C) ஒருபொருட் பன்மொழி
D) அடுக்குத்தொடர்

**154. இலக்கணக் குறிப்பு தருக – "ஆடுகொடி"**

A) வினைத்தொகை B) பண்புத்தொகை
C) உரிச்சொல் D) இடைச்சொல்

**155. இலக்கணக் குறிப்பு தருக – "எந்தை"**

A) உருபு மயக்கம் B) உருவகம்
C) பண்புத்தொகை D) மரூஉ



www.recruitmentguru.com

156. இலக்கணக் குறிப்பெழுதுக – "காய்கறி"
A) உம்மைத்தொகை B) உவமைத்தொகை
C) பண்புத்தொகை D) அன்மொழித்தொகை

157. இலக்கணக் குறிப்பெழுதுக – "பூங்கண்"
A) உவமைத்தொகை B) பண்புத்தொகை
C) வினைத்தொகை D) அன்மொழித்தொகை

158. "வாழ்க" என்பதன் இலக்கணம்
A) உருவகம்
B) உவமை
C) பண்புத்தொகை
D) வியங்கோள்வினைமுற்று

159. "கடிநகர்" என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு
A) வினைத்தொகை B) உவமைத்தொகை
C) உரிச்சொற்றொடர் D) பண்புத்தொகை

160. இலக்கணக்குறிப்பு காண் – "தனித்தனி"
A) அடுக்குத்தொடர் B) இரட்டைக்கிளவி
C) ஒருபொருட்பன்மொழி D) முரண்தொடை

161. எவ்வகை வினை வகை எனக் கண்டறிக
"கடிதம் அன்னையால் எழுதப்பட்டது"
A) செய்வினை B) செயப்பாட்டுவினை
C) தன்வினை D) பிறவினை

162. எவ்வகை வினை வகை எனக் கண்டறிக
"தந்தை மகனைப் பாராட்டினார்"
A) செய்வினை B) தன்வினை
C) எதிர்மறைவினை D) செயப்பாட்டுவினை

163. எவ்வகை வினை எனக் கண்டறிக
"இராசராசன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவித்தான்"
A) தன்வினை வாக்கியம்
B) பிறவினை வாக்கியம்
C) எதிர்மறை வினை வாக்கியம்
D) குறிப்பு வினை வாக்கியம்

164. எவ்வகை வினை எனக் கண்டறிக
"கண்ணன் திருக்குறள் படித்தான்"
A) பிறவினை B) தன்வினை
C) செயப்பாட்டுவினை D) குறிப்பு வினை

165. எவ்வகை வினை வகை எனக் கண்டறிக
"புத்தகம் அப்பாவால் வாங்கப்பட்டது"
A) செய்வினை B) செயப்பாட்டுவினை
C) குறிப்பு வினை D) தன் வினை

166. உவமையால் விளக்கப்பெறும் கருத்தைத் தேர்க
"அத்தி பூத்தாற்போல"
A) வீண் B) கலக்கம்
C) அருமை D) பெருமை

167. உவமையால் விளக்கப்பெறும் கருத்தைத் தேர்க
"இருதலைக்கொள்ளி எறும்பு போல்"
A) கோபம் B) தெளிவு
C) விழிப்பு D) தவிப்பு

168. உவமையால் விளக்கப்பெறும் கருத்தைத் தேர்க
"சூரியனைக் கண்ட பனிபோல்"
A) ஆர்வம் B) ஏமாற்றம்
C) விலகல் D) ஒழுங்கு

169. உவமையால் விளக்கப்பெறும் கருத்தைத் தேர்க
"எலியும் பூனையும் போல"
A) ஒற்றுமை B) கோபம்
C) பகைமை D) நட்பு

170. கீழ்காணும் உவமைத்தொடரால் விளக்கப்படும் பொருள் எது?
"உடுக்கை இழந்தவன் கைபோல"
A) ஆசிரியர் மாணவர் உறவு
B) தந்தை மகன் உறவு
C) இடுக்கண் களையும் நட்பு
D) அரசன் அமைச்சன் தொடர்பு

171. வழூஉச் சொற்களை நீக்குக
A) குடக்கூலி எவ்வளவு?
B) குடிக்கூலி எவ்வளவு?
C) வாடகை எவ்வளவு?
D) ரெண்ட் எவ்வளவு?

172. பிறமொழிச் சொற்கள் நீக்கிய தொடர் தேர்க
A) என் சிநேகிதன் நல்லவன்
B) என் சிநேகிதம் நல்லவன்
C) என் சிநேகிதம் நல்லது
D) என் நண்பன் நல்லவன்

173. பிறமொழிச் சொற்கள் நீக்கிய தொடர் தேர்க
A) சார் என்னை ஆசிர்வதியுங்கள்
B) ஆசிர்வதியுங்கள் சார்! என்னை
C) ஐயா! என்னை வாழ்த்துங்கள்
D) ஐயா! என்னை ஆசிர்வதியுங்கள்

174. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியம் தேர்க
A) நண்பர்களுடன் சபாநாயகர் வந்தார்
B) நண்பர்கள் சகிதம் சபாநாயகர் வந்தார்
C) மித்திரர்களுடன் சபாநாயகர் வந்தார்
D) நண்பர்களுடன் அவைத் தலைவர் வந்தார்

175. "இண்டியன் பீனல் கோட்" (Indian Penal Code) என்பதற்கு சரியான தமிழ்ச் சொல்
A) இந்திய தண்டனைச் சட்டம்
B) இந்திய குடியுரிமைச் சட்டம்
C) குற்றவியல் நடைமுறைச் சட்டம்
D) இந்திய நடைமுறைச் சட்டம்

176. சரியான தமிழ்ச்சொல் எழுதுக – கம்பெனி
A) கூட்டம் B) திரள்
C) குழுமம் D) நிறுவனம்



www.recruitmentguru.com

177. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்க – "ரிஜிஸ்டர் போஸ்ட்" அனுப்பு
A) பதிவுக்கடிதம் B) பதிவு போஸ்ட்
C) பதிவு தபால் D) பதிவு அஞ்சல்

178. தமிழ்ச்சொல்லைத் தேர்க
A) சென்ட்ரல் கவர்ண்மென்ட்
B) மத்திய அரசு
C) நடுவண் அரசு
D) மத்திய கவர்ண்மென்ட்

179. ஒலி வேறுபாடு அறிக

| | வெல்லம் | வெள்ளம் |
|---|---|---|
| A) | இனிப்பு | நீர்ப்பெருக்கு |
| B) | காய்கறி | திண்பண்டம் |
| C) | பொரி | அவல் |
| D) | மிகுதி | குறைவு |

180. ஒலி வேறுபாடு அறிக

| | மரம் | மறம் |
|---|---|---|
| A) | விறகு | வீரம் |
| B) | விறகு | பகை |
| C) | விறகு | நட்பு |
| D) | மழை | நீர் |

181. வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக – "பிற"
A) பிறந்து
B) பிறப்பான்
C) பிறந்தான்
D) பிறந்தவர்

182. வேர்ச்சொல்லை வினைமுற்றாக்குக – "நட"
A) நடந்த B) நடக்க
C) நடந்தான் D) நட

183. வேர்ச்சொல்லை பெயரெச்சமாக்குக் – "படி"
A) படித்தல் B) படித்த
C) படித்து D) படித்தவன்

184. "ஓடு" என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் அறிக
A) ஓடிய B) ஓடினான்
C) ஓடும் D) ஓடியவன்

185. கீழ்காண் சொற்களை அகர வரிசைபடுத்துக அரவம், அக்கம், அறிஞன், அச்சம்
A) அச்சம், அறிஞன், அக்கம், அரவம்
B) அக்கம், அச்சம், அரவம், அறிஞன்
C) அறிஞன், அரவம், அச்சம், அக்கம்
D) அரவம், அக்கம், அச்சம், அறிஞன்

186. பின்வரும் பெயர்களை அகர வரிசைப்படுத்துக மங்களம், அழகன், தணிகை, செல்வி, ஔவை
A) அழகன், ஔவை, தணிகை, மங்களம், செல்வி
B) அழகன், ஔவை, தணிகை, செல்வி, மங்களம்
C) அழகன், தணிகை, ஔவை, செல்வி, மங்களம்
D) அழகன், ஔவை, செல்வி, தணிகை, மங்களம்

187. கீழ்காண் சொற்களை அகர வரிசைப்படுத்துக தரங்கிணி, குருகுலம், கலப்பை, சாகசம்
A) குருகுலம், கலப்பை, சாகசம், தரங்கிணி
B) கலப்பை, சாகசம், தரங்கிணி, குருகுலம்
C) சாகசம், தரங்கிணி, குருகுலம், கலப்பை
D) கலப்பை, குருகுலம், சாகசம், தரங்கிணி

188. சொற்களை அகர வரிசைப்படுத்துக
A) காகம், கழுதை, சேவல், தேனீ
B) கழுதை, சேவல், தேனீ, காகம்
C) கழுதை, காகம், சேவல், தேனீ
D) காகம், தேனீ, சேவல், கழுதை

189. சொற்களை அகர வரிசைப்படுத்துக
A) படை, குடி, தேர், மாலை
B) குடி, தேர், படை, மாலை
C) படை, தேர், மாலை, குடி
D) குடி, படை, தேர், மாலை

190. சொற்களை அகர வரிசைப்படுத்துக
A) கடவுள், கிளி, கோவை, காதல்
B) கடவுள், காதல், கிளி, கோவை
C) காதல், கடவுள், கிளி, கோவை
D) கோவை, காதல், கிளி, கடவுள்

191. பொருத்துக

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1) கழை | அ) புற்று |
| 2) அலகு | ஆ) ஒற்று |
| 3) அளை | இ) பறவை மூக்கு |
| 4) உளவு | ஈ) மூங்கில் |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஈ | ஆ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | ஈ | இ | அ | ஆ |
| D) | இ | அ | ஆ | ஈ |

192. பொருத்துக

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1) காளை | அ) நாக்கு |
| 2) தால் | ஆ) பயம் |
| 3) கிலி | இ) மகிழ்ச்சி |
| 4) களி | ஈ) எருது |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | அ | ஆ | இ |
| B) | ஈ | ஆ | அ | இ |
| C) | அ | இ | ஈ | ஆ |
| D) | இ | அ | ஆ | ஈ |



www.recruitmentguru.com

193. பொருத்துக

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1) சொல் | அ) ஆடை |
| 2) கூரை | ஆ) வீட்டு முகடு |
| 3) காலை | இ) எருது |
| 4) காளை | ஈ) முற்பொழுது |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | இ | ஈ |
| B) | அ | ஆ | ஈ | இ |
| C) | ஆ | அ | ஈ | இ |
| D) | அ | ஆ | இ | ஈ |

194. பொருத்துக

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1) கேளிர் | அ) நட்பு |
| 2) மடி | ஆ) மூதேவி |
| 3) மாமுகடி | இ) சோம்பல் |
| 4) கேண்மை | ஈ) உறவினர் |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஆ | அ | ஈ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | ஈ | அ | ஆ | இ |

195. தால் என்பதன் பொருள்

A) பாதம் B) தாலி
C) கலை D) நாக்கு

196. பொருத்துக

| புகழ்பெற்ற நூல் | நூலாசிரியர் |
|---|---|
| 1) அவனும் அவளும் | அ) பாரதிதாசன் |
| 2) ஆசிய ஜோதி | ஆ) சுரதா |
| 3) எதிர்பாராத முத்தம் | இ) நாமக்கல் கவிஞர் |
| 4) தேன்மழை | ஈ) தேசிக விநாயகம் பிள்ளை |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | ஆ | அ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஈ | இ | அ | ஆ |

197. பொருத்துக

| புகழ்பெற்ற நூல் | நூலாசிரியர் |
|---|---|
| 1) கரித்துண்டு | அ) அண்ணாதுரை |
| 2) குறிஞ்சிமலர் | ஆ) ராஜம் கிருஷ்ணன் |
| 3) குறிஞ்சித்தேன் | இ) மு. வரதராசன் |
| 4) பார்வதி பி.ஏ. | ஈ) நா.பார்த்தசாரதி |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | ஆ | அ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | ஈ | இ | அ | ஆ |

198. பொருத்துக

| புகழ்பெற்ற நூல் | நூலாசிரியர் |
|---|---|
| 1) தமிழியக்கம் | அ) பாரதியார் |
| 2) ஏசுகாவியம் | ஆ) பாரதிதாசன் |
| 3) குயில் பாட்டு | இ) நாமக்கல் கவிஞர் |
| 4) மலைக்கள்ளன் | ஈ) கண்ணதாசன் |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஈ | ஆ |
| B) | ஆ | ஈ | இ | அ |
| C) | ஈ | இ | அ | ஆ |
| D) | ஆ | ஈ | அ | இ |

199. பொருத்துக

| புகழ்பெற்ற நூல் | நூலாசிரியர் |
|---|---|
| 1) வேதவியாசர் | அ) இராமா அவதாரம் |
| 2) மாணிக்கவாசகர் | ஆ) மகாபாரதம் |
| 3) திருமூலர் | இ) திருவாசகம் |
| 4) கம்பர் | ஈ) திருமந்திரம் |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | இ | ஈ | அ | ஆ |

200. பொருத்துக

| | |
|---|---|
| 1) சுந்தரர் | அ) திருத்தொண்டர் மாக்கதை |
| 2) நம்பியாண்டார் நம்பி | ஆ) திருத்தொண்டர் தொகை |
| 3) அருண்மொழித் தேவர் | இ) திருவெங்கைக் கலம்பகம் |
| 4) சிவப்பிரகாச சுவாமிகள் | ஈ) திருத்தொண்டர் திருவந்தாதி |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஈ | ஆ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | அ | ஈ | இ | ஆ |
| D) | ஈ | ஆ | அ | இ |



www.recruitmentguru.com

# விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (B) | 2. (C) | 3. (B) | 4. (A) | 5. (B) | 6. (A) | 7. (D) | 8. (B) | 9. (B) | 10. (A) |
| 11. (B) | 12. (B) | 13. (A) | 14. (A) | 15. (C) | 16. (B) | 17. (A) | 18. (B) | 19. (C) | 20. (A) |
| 21. (D) | 22. (A) | 23. (A) | 24. (B) | 25. (B) | 26. (C) | 27. (A) | 28. (A) | 29. (C) | 30. (A) |
| 31. (A) | 32. (A) | 33. (A) | 34. (B) | 35. (A) | 36. (C) | 37. (B) | 38. (B) | 39. (B) | 40. (C) |
| 41. (B) | 42. (A) | 43. (C) | 44. (A) | 45. (D) | 46. (C) | 47. (C) | 48. (B) | 49. (B) | 50. (D) |
| 51. (C) | 52. (C) | 53. (B) | 54. (A) | 55. (B) | 56. (A) | 57. (A) | 58. (D) | 59. (D) | 60. (C) |
| 61. (B) | 62. (A) | 63. (A) | 64. (B) | 65. (C) | 66. (D) | 67. (A) | 68. (A) | 69. (A) | 70. (C) |
| 71. (A) | 72. (A) | 73. (C) | 74. (B) | 75. (C) | 76. (D) | 77. (B) | 78. (C) | 79. (A) | 80. (C) |
| 81. (A) | 82. (B) | 83. (D) | 84. (A) | 85. (C) | 86. (D) | 87. (B) | 88. (A) | 89. (D) | 90. (C) |
| 91. (C) | 92. (C) | 93. (B) | 94. (D) | 95. (A) | 96. (A) | 97. (D) | 98. (B) | 99. (A) | 100. (B) |
| 101. (D) | 102. (A) | 103. (C) | 104. (C) | 105. (C) | 106. (D) | 107. (*) | 108. (C) | 109. (C) | 110. (A) |
| 111. (B) | 112. (D) | 113. (B) | 114. (B) | 115. (B) | 116. (A) | 117. (B) | 118. (A) | 119. (C) | 120. (A) |
| 121. (C) | 122. (B) | 123. (C) | 124. (D) | 125. (B) | 126. (A) | 127. (A) | 128. (D) | 129. (D) | 130. (D) |
| 131. (B) | 132. (D) | 133. (C) | 134. (A) | 135. (C) | 136. (B) | 137. (B) | 138. (C) | 139. (B) | 140. (B) |
| 141. (B) | 142. (C) | 143. (A) | 144. (C) | 145. (B) | 146. (B) | 147. (B) | 148. (C) | 149. (C) | 150. (D) |
| 151. (B) | 152. (B) | 153. (C) | 154. (A) | 155. (D) | 156. (A) | 157. (A) | 158. (D) | 159. (C) | 160. (A) |
| 161. (B) | 162. (A) | 163. (B) | 164. (B) | 165. (B) | 166. (*) | 167. (D) | 168. (C) | 169. (C) | 170. (C) |
| 171. (B) | 172. (D) | 173. (C) | 174. (D) | 175. (A) | 176. (D) | 177. (D) | 178. (C) | 179. (A) | 180. (A) |
| 181. (A) | 182. (C) | 183. (B) | 184. (D) | 185. (B) | 186. (D) | 187. (D) | 188. (C) | 189. (B) | 190. (B) |
| 191. (C) | 192. (A) | 193. (B) | 194. (B) | 195. (D) | 196. (B) | 197. (A) | 198. (D) | 199. (C) | 200. (B) |

*107.* கொடுக்கப்பட்ட அனைத்து விடைகளும் தவறு. குதிரை என்பது பொருட்பெயரைக் குறிக்கும்.

*166.* கொடுக்கப்பட்ட அனைத்து விடைகளும் தவறு. 'அத்தி பூத்தாற் போல' என்ற உவமை அதிசயமாக (அரிதாக) நடைபெறும் செயலைக் குறிக்கும்.



guru.com